**செப்டம்பர் 20, 21 தேதிகளில் இடிந்தகரைக்கும் இதர கிராமங்களுக்கும் சென்ற உண்மை அறியும் குழுவின் அறிக்கை**

**உண்மை அறியும் குழுவின் உறுப்பினர்கள்**

திரு பி.ஜி. கோல்செ பாட்டில், முன்னாள் நீதிபதி, மும்பை உயர் நீதி மன்றம், புனெ
கல்பன ஷர்மா, மூத்த பத்திரிகையாளர், மும்பை
ஆர். என். ஜோ டி குருஸ், எழுத்தாளர், சென்னை

உண்மை அறியும் குழு சென்ற கிராமங்கள்/இடங்கள்

இடிந்தகரை
சுனாமி காலனி, இடிந்தகரை
வைராவிகிணறு
கூடங்குளம்
சிறார் காப்பகம், பாளையம்கோட்டை

**முன்னுரை**

கூடங்குளத்தில் நிறுவப்பட்டு வரும் அணுஉலைக்கு எதிர்ப்புத் தெரிவித்து மேற்கண்ட கிராமங்களில் வாழ்கின்ற மக்கள் செப்டம்பர் 10, 11 தேதிகள் அன்று திரண்ட போது, காவல்துறையினர் கண்ணீர்புகையை பயன்படுத்தி அவர்களை கலைத்தனர் என்றும் அவர்கள் மீது தடியடி பிரயோகம் செய்தனர் என்றும் உண்மை அறியும் குழுவினர் அறிய வந்தனர். அமைதியாக போராடி வந்தவர்களில் பலர் கைது செய்யப்பட்டனர் என்றும், பலர் காயமுற்றிருந்தனர் என்பது குறித்தும் செய்திகள் வெளிவந்தன. மேலும் தடியடிபிரயோகம் நடந்த பிறகு, காவல்துறையினர் வீடு வீடாகச் சென்று சோதனையிட்டனர் என்றும், மக்களை பயமுறுத்தி, மிரட்டினர் என்றும் பொருட்சேதம் விளைவித்தனர் என்றும் செய்திகள் வெளிவந்தன.

இந்த நிகழ்வுகளை பற்றி நேரடியாகத் தெரிந்து கொள்வதற்காக உண்மை அறியும் குழுவினர் மேற்சொன்ன கிராமங்களுக்குச் சென்று மக்களைச் சந்தித்தனர். அவர்களுடைய வாக்குமூலங்களை கேட்டனர். அவர்கள் தங்களுக்கு நடந்தவற்றை விளக்கக் காட்டிய சாட்சியங்களை கண்டனர்.

குழுவினர் கண்டவற்றின், கேட்டவற்றின் சுருக்கம் இங்கு வழங்கப்பட்டுள்ளது.

**கண்டுபிடிப்புகளின் சுருக்கம்**

குழுவினர் சந்தித்த தனிநபர்கள் அளித்த வாக்குமூலங்களிலிருந்து பலர் காயப்பட்டிருத்ததை அறிய முடிந்தது. கண்ணீர்ப்புகை வீசப்பட்டதால் ஏற்பட்ட தீக்காயங்களுடன் பலரை பார்த்தோம். சிலருக்கு தையல் போடப்பட வேண்டியிருந்தது. ஆனால் ஊரை விட்டு நீங்கி மருத்துவ உதவி நாடிச் செல்ல பலர் பயப்படுகின்றனர், அவ்வாறு செய்தால் தாங்கள் கைது செய்யப்படலாம் என்று அஞ்சுகின்றனர் - இதை நாங்கள் தொடர்ந்து கவனித்தோம்.

லூர்த்து மாதா ஆலயத்தை காவல் துறையினர் பாழ்ப்படுத்தியிருப்பது குறித்து பலர் செய்திகளை கூறினர். அன்னை மேரியின் திருவுருவச் சிலை உடைக்கப்பட்டதாகவும் காவல்துறையினர் ஆலயத்தில் சிறுநீர்க் கழித்ததாகவும் கூறினர். உடைக்கப்பட்ட சிலையின் பகுதிகள் உண்மை அறியும் குழுவினருக்கு காட்டப்பட்டன.

சுனாமி காலனி மக்கள் பீதியுற்றிருந்ததைக் கண்கூடாகக் காணமுடிந்தது. மக்கள் தமது வீடுகளுக்கு வர பயப்படுவதால் பல வீடுகள் பூட்டியே உள்ளதை காண முடிந்தது. செப்டம்பர் 10 அன்று ஊருக்குள் நுழைந்தகாவல் துறையினரால் வீட்டுச் சன்னல்களின் கண்ணாடிகள் உடைக்கப்பட்டிருப்பதையும், அலமாரிகளிலுள்ள பொருட்கள் சூரையாடப்பட்டிருப்பதையும் வீட்டு கதவுகள் சேதப்படுத்தப்பட்டிருப்பதையும் மக்கள் உண்மை அறியும் குழுவினருக்குக் காட்டினர். அதற்கு பிறகு காவல்துறையினர் பலநாட்களுக்கு ஊரில் முகாமிட்டிருக்கின்றனர். இதனால்தான் மக்கள் இரவு நேரத்தில் ஊரில் இருக்கப் பயப்படுகின்றனர். இரவானதும் இடிந்தகரை மாதா கோயில் வளாகத்தில் உள்ள கூடாரங்களில் தங்கி விடுகின்றனர்.

வைராவிக்கிணறு கிராமத்திலும் மக்கள் பீதியுடன்தான் இருந்தனர். செப்டம்பர் 10 அன்று காவல்துறையினர் ஊருக்குள் நுழைந்து ஏற்படுத்திய சேதங்களை அவர்களும் காட்டினர். ஊரைச் சேர்ந்த 9 பேர் கைது செய்யப்பட்டிருப்பதாகவும், அவர்களில் 16 வயது சிறுவனும், ஏறக்குறைய கண்பார்வையிழந்துவிட்ட 75 வயது முதியவரும் அடங்குவர் என்றும் அவர்கள் தெரிவித்தனர். தாங்கள் அப்படி என்ன செய்துவிட்டோம் காவல்துறையினர் தங்களை இவ்வாறு நடத்தியதற்கு என்று அவர்கள் திரும்பதிரும்ப கேட்டனர்.

கூடங்குளம் அணுஉலைக்கு அருகாமையில் வாழும் கூடங்குளம் கிராமத்தைச் சேர்ந்தவர்கள் மிகுந்த அச்சத்துடன் காணப்பட்டனர். செப்டம்பர் 10 அன்று பெரிய காவல்துறை படை ஒன்று ஊருக்குள் நுழைந்து 34 பேர்களை கைது செய்தனர் என்றும், மக்கள் வீடுகளில் பயந்து ஒளிந்திருக்க, காவல்துறையினர் வீடுகளுக்குள் புகுந்து பொருட் சேதம் ஏற்படுத்தினர் என்றும், வண்டிகளை பாழ்ப்படுத்தினர் என்றும் மக்கள் உண்மை அறியும் குழுவினரிடம் கூறினர். இதனால் இருட்டியதும் வீட்டை பூட்டிக் கொண்டு வீட்டிற்குள் இருப்பதாகவும், ஏதாவது வண்டி சத்தம் கேட்டாலே பயப்படுவதாகவும், இரவில் சரிவர தூங்க முடியவில்லை என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

எல்லா இடங்களிலும் மக்களுக்கு நேர்ந்ததை கவனிக்கும் போது பொதுவான சில அம்சங்களை அடையாளம் காண முடிகிறது. கைது செய்யப்பட்டள்ள அனைவரும் ஒரு போல கீழ்க்கண்ட சட்டப் பிரிவுகளின் கீழ்தான் கைது செய்யப்பட்டுள்ளனர்.

124A (தேசத்துரோகச் சட்டம்), 121A (அரசுக்கு எதிராக போர் செய்வது), 307, 353, 147, 148.

குழுவினர் சந்தித்துப் பேசிய 4 கிராமங்களைச் சேர்ந்த பெண்கள் எல்லோருமே தாங்கள் காவல் நிலையத்துக்கு கொண்டு போகப்பட்ட போதும் சரி, காவல் துறையினர் ஊருக்குள் நுழைந்தபோதும் சரி, தங்களிடம் தரக்குறைவாகவும், பாலியல்வக்கிரத்தனத்துடனும் பேசியதாக வாக்குமூலங்களை அளித்துள்ளனர். உடல்ஊனமுற்ற பெண் தான் பாலியல்ரீதியாக துன்புறுத்தப்பட்டதாகக் கூறினார். கடற்கரையில் நடந்த அணு உலைக்கு

எதிரான போராட்டத்தின் போது தன்னை காவல்துறையினர் துரத்திக் கடலுக்குள் விரட்டினர் என்றும், அப்படிச் செய்யும் போது ஆபாசமான சைகைகளை செய்தனர் என்றும் மற்றொருவர் சாட்சியுரைத்தார்.

நிலைமை இத்தனை மோசமாக உள்ள போதிலும் தாங்கள் அணுஉலையை தொடர்ந்து எதிர்க்கப் போவதாக மக்கள் கூறினர். இவ்வளவு நடந்த பிறகும் NPCIL (Nuclear Power Corporation of India Ltd.) நிறுவனத்தைச் சேர்ந்த யாரும் முறையான பொது விசாரணையை நடத்தி மக்களின் கருத்துகளையும் அச்சங்களையும் அறிய ஏன் முயற்சி செய்யவில்லை என்றும் அவர்கள் கேள்வி எழுப்பினர். அணுஉலைக்கு அருகே வாழ்பவாக்ள் என்பதால் இத்தகைய கேள்விகளுக்கு விடைக்காண தங்களுக்கு முழுவுரிமை இருப்பதாகவும் அவர்கள் கூறினர்.

**முடிவுகள்**

உண்மை அறியும் குழுவாக நாங்கள் கண்டறிந்த தகவல்கள் சில கனமான பிரச்சனைகளை கிளப்புவதாக உள்ளன. குழந்தைகள், பெண்கள், முதியவர்கள் என்று யாரையும் விட்டுவைக்காமல் காவல்துறையினர் தாக்குதல் நடத்தியுள்ளதை எங்களால் அவதானிக்க முடிந்தது. அது மட்டுமல்லாமல், காவல்துறையினர் தனியார், பொது சொத்துகளை சேதப்படுத்தியுள்ளனர், பொருட்களை சூரையாடியுள்ளனர், மக்களை மிரட்டியுள்ளனர். எல்லாவற்றிர்க்கும் மேலாக காவல்துறையினரின் செயல்பாடுகள் சட்டத்துக்கு புறம்பானவையாக உள்ளபோதிலும், பாதிக்கப்பட்டவர்கள் அவர்களுக்கு எதிராக புகார்கள் அளிக்க முடியாத நிலையில் உள்ளது கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய விஷயமாகவுள்ளது.

எனவே, சிறார் உரிமைகள் பாதுகாப்புக்கான தேசிய ஆணையம் (National Commission for Protection of Child Rights), பெண்களுக்கான தேசிய, மாநில ஆணையங்கள் (State/National Commissions for Women), தேசிய, மாநில மனிதவுரிமை ஆணையங்கள் (National/State Human Rights Commissions), மாண்புமிகு உச்ச நீதி மன்றம் ஆகியன இந்த மனித உரிமை மீறல்களை அவ்வாறானவையாக அடையாளங்கண்டு நீதியை நிலைநாட்டவும் இயல்பு வாழ்க்கையை மக்கள் வாழ உதவும் வகையிலும் உடனாடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

நாங்கள் கேட்டட எல்லா விஷயங்களையும் உறுதிபடுத்திக் கொள்ள எங்களுக்கு நேரமில்லை என்றாலும் நாங்கள் பார்த்த, டேட்டவற்றின் அடிப்படையில் கீழ்க்கண்டவற்றை எங்களால் உறுதியாக கூற முடியும்.

1. செப்டம்பர் 10 அன்று கைதானவர்களுக்கு எதிராக எந்தவித தர்க்கநியாயமும் இன்றி சட்டப் பிரிவுகள் 124A, 121A பயன்படுத்தப்பட்டுள்ளன. ஒரே விதமான மொழியில் அதே குற்றப்பிரிவுகளை உள்ளடக்கிய ஒரே மாதிரியான அறிக்கைகளை காவல்துறையினர் தயாரித்துள்ளனர். இவற்றை மக்கள் எங்களிடம் காட்டினர். நான்கு சிறுவர்களுக்கும், பல முதியவர்களுக்கும் எதிராக இத்தகைய சட்டப்பிரிவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

2. தாய்மார்கள், மனைவிகள் பார்த்திருக்க, காவல் துறையினர் அவர்களது பிள்ளைகளையும் கணவன்மார்களையும் அடித்து இழுத்துக் சென்றுள்ளனர். பொதுவில்

வைத்து சிறுவர்களும் வயதானவர்களும் இவ்வாறு அவமானப்படுத்தப்பட்டு, துன்புறுத்தப்பட்டுள்ளதால் அவர்கள் மன உளைச்சலுக்கு ஆளாகக்கூடும்.

3. காவல்துறையினர் தம்மை நோக்கி ஆபாசமான சைகைகளை செய்ததையும் மிக மோசமான, பாலியல் வசவுச் சொற்களை பயன்படுத்தியதையும் குறித்து பல பெண்கள் எங்களிடம் தெரிவித்துள்ளதன் பின்னணியில், அவர்களுடைய கூற்றுகள் நம்பத் தகுந்தவையே என்ற முடிவுக்கு நாங்கள் வந்துள்ளோம்.

4. காவல்துறையினரின் செயல்பாடுகள் எல்லா பக்கமும் பீதியை ஏற்படுத்தியுள்ளன. கூடங்குளத்துக்கு போகும் வழியில் காவல் துறையினர் காவல்அரண் அமைத்துள்ளதை இந்தக் குழுவினர் பார்த்தனர். அந்த பகுதிகளில் சாலைமார்க்கமாக செல்கையில் எல்லா பக்கமும் காவல்துறையினர் திரண்டு நிற்பதைக் காண முடிந்தது. இதனால் மக்கள் ஏதோ யுத்தப் பகுதியில் இருப்பது போலவும் தாங்கள் சிறையிடப்பட்டுள்ளது போலவும் உணர்கின்றனர்.

5. லூர்துமாதா ஆலையத்தின் புனிதத் தன்மையை மதிக்காமல் காவல்துறையினர் அந்த கோவிலை பாழ்ப்படுத்தியது என்பது வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டிய ஆபத்தான செயலாகும்.

6. மக்களுக்கு ஏற்பட்டிருந்த காயங்களை நாங்கள் பார்த்தோம். அவை சந்தேகத்துக்கு இடமின்றி உண்மையான காயங்களே. மருத்துவ உதவி நாடிச் செல்ல மக்கள் பயப்படுகின்றனர் என்பது கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய விஷயம். தமது கிராமங்களை விட்டுச் சென்றால் காவல்துறையினர் கைது செய்துவிடுவார்கள், அல்லது அடித்துத் துன்புறுத்துவார்கள் என்ற அவர்களது அச்சம் கவனத்துக்குரியதாகும்.

7. இடிந்தகரை பகுதியிலுள்ள சுனாமி காலனியிலுள்ள வீடுகளுக்கு ஏற்பட்டுள்ள சேதங்களை நாங்கள் நேரில் சென்று பார்வையிட்டோம். சில நாளிதழ்களில் குறிப்பிட்டுள்ளது போல இவை கற்பிக்கப்பட்ட சேதங்கள் அல்ல, உண்மையானவைதான். காவல்துறையினரின் செயல்பாடுகள் ஏற்படுத்தியுள்ள பயத்தையும் பீதியையும் எங்களால் நேரடியாகக் காண முடிந்தது.

8. மக்களுக்கு இவ்வளவு நேர்ந்துள்ள போதிலும் இந்த நிதர்சனங்களை குறித்து புகார்கள் அளிக்க இயலாதவர்களாக அவர்கள் உள்ளதையும் எங்களால் அவதானிக்க முடிந்தது. தங்களை தாக்கி, தங்களது வீடுகளை சேதப்படுத்தி, தங்களில் பலரை முறையற்ற வகையில் கைது செய்த அதே காவல்துறையினரிடம் எவ்வாறு நீதிக் கேட்டுச் செல்ல முடியும் என்று மக்கள் எங்களிடம் திரும்பவும் திரும்பவும் கூறினர்.

9. பாளையம்கோட்டையிலுள்ள சிறார் பாதுகாப்பு மையத்தில் உள்ள சிறுவர்களை சந்தித்து பேச எங்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டதன் பின்னணியில் அவர்கள் அடித்து, சித்திரவதை செய்யப்பட்டிருக்கக் கூடும் என்ற ஐயப்பாடு எங்களுக்கு ஏற்பட்டுள்ளது.

**கண்டனம்**

அமைதியாக போராடிக் கொண்டிருந்த மக்களுக்கு எதிராக கட்டவிழுத்துவிடப்பட்ட வன்முறையை எந்தவிதத்திலும் நியாயப்படுத்த முடியாது. தமது எதிர்ப்பை தெரிவித்துப்

போராட மக்களுக்கு முழுவுரிமை உண்டு. மக்கள் திரளினர் கலைந்து செல்ல வேண்டும் என்று காவல்துறையினர் விரும்பினால் அவர்களை அவ்வாறு செய்ய வைக்க எத்தனையோ அமைதியான வழிகள் உண்டு. பெண்களும், குழந்தைகளும், முதியவர்களும் அடங்கிய கூட்டத்துள் நுழைந்து தடியடிபிரயோகம் செய்வதற்கு முன் காவல்துறையினர் ஏன் மக்கள் தலைவர்களுடன் பேச முனையவில்லை என்ற கேள்வி எழுகிறது.

செப்டம்பர் 10 அன்று கட்டவிழுத்துவிடப்பட்ட வன்முறையை தொடர்ந்து அந்த பகுதி கிராமங்கள் இன்றளவும் பீதியின் பிடியில் உள்ளன என்பது கண்டனத்துக்குரியது. அது போல வழிப்பாட்டு தலம் ஒன்று அசிங்கப்படுத்தப்பட்டதும் கண்டனத்துக்குரியதாகும். பெண்களுக்கு எதிராக பாலியல் வசவுச் சொற்களை பயன்படுத்தி அவர்களை பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளாக்கிய காவல்துறையினரின் செயல்கள் மிக வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டியவை. பெண்களை ஏன் ஆண்காவலர்கள் அணுகினர், பெண்போலீசார் ஏன் இந்த நடவடிக்கையில் ஈடுபடத்தப்படவில்லை என்ற கேள்வியும் எழுகிறது.

இந்த அறிக்கையுடன் ரிமாண்ட் செய்யப்பட்ட 56 போ்களின் விவரங்களை அடக்கிய பட்டியலை இணைத்துள்ளோம். இவர்களைத் தவிர காணாமல் போனவர்கள், தேடியும் கிடைக்காதவர்கள் என்று நிறைய பேர்கள் உள்ளனர். அவர்களது குடும்பத்தார் அவர்களை எளிதில் சந்திக்க முடியாதபடிக்கு, கைது செய்யப்பட்டவர்கள் வேண்டுமென்றே தொலைவிலுள்ள சிறைகளுக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர் என்ற ஐயப்பாடும் எங்களுக்கு எழுகிறது. .

இந்த பகுதி மக்களை நாங்கள் 2 நாட்கள் சந்தித்துப் பேசினோம். காவல்துறையினர் ஏற்படுத்திய பொருட் சேதத்தைக் கண்டோம். சட்டத்தை பாதுகாப்பதற்காக உள்ள ஒரு துறையை சேர்ந்தவர்களின் இத்தகைய நடத்தைக்கு சனநாயக நாடு என்று சொல்லிக் கொள்ளும் நாட்டில் ஒரு நாளும் இடம் இருக்க முடியாது என்று நாங்கள் உறுதியாக நம்புகிறோம்.

ஓராண்டு காலமாக அமைதியான முறையில் தமது எதிர்ப்பைத் தெரிவித்து போராடி வரும் மக்களை தேச துரோகிகளாகவும் அரசுக்கு எதிராக போர் தொடுப்பவர்கள் என்றும் நியாயமற்ற வகையில் சித்தரித்தால், இனி இந்நாட்டில் பேச்சுரிமையின் எதிர்க்காலம் தான் என்ன?

**மக்களின் வாக்குமூங்கள்**

**இடிந்தகரை**

இடிந்தகரையிலுள்ள லூர்து மாதா ஆலையத்தின் முன் அமைக்கப்பட்டுள்ள பந்தலின்கீழ் திரண்டு கூடங்குளத்திலுள்ள அணுஉலைக்கு எதிரான தமது போராட்டத்தை நூற்றுக்கணக்கான மக்கள், குறிப்பாக பெண்கள், குழந்தைகள் ஆகியோர் ஓராண்டு காலமாக நடத்தி வருகின்றனர்.

உண்மை அறியும் குழுவினர் பந்தலுக்கு வந்ததும் அவர்களில் சிலர் ஒவ்வொருவராக குழுவினரை அணுகி, செப்டம்பர் 10ஆம் தேதி அன்று கடற்கரையில் காவல்துறையினர் போராடும் மக்கள்மீது தடியடிப்பிரயோகம் செய்ததையும் கண்ணீர்ப்புகைப் பாய்ச்சியதையும் தங்களுடைய அனுபவங்களினூடாக எடுத்துரைத்தனர்.

43 வயது **செல்சம்**. சொந்த தோணியுடைய மீனவர். அவர் கடற்கரையில் நடந்த போராட்டத்தில் பங்கேற்றிருந்தார். கழுத்திலிருந்து முகவாய்க்கட்டை வரை பெரிய பிளாஸ்திரியுடன் இருந்தார். அவர் கூறியதாவது -

"(கூடங்குளம் அணுஉலையில்) எரிபொருள் நிரப்பப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் உலையை நோக்கி நாங்கள் திரளாக சென்று கொண்டிருந்தோம். ஒரு கட்டத்தில் காவல்துறையினர் கடற்கரையிலேயே எங்களைத் தடுத்து நிறுத்தினர். நாங்கள் அங்கேயே அமர்ந்து எங்களுடைய போராட்டத்தைத் தொடர்ந்தோம். இரவை கடற்கரையிலேயே கழித்தோம். ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என்று நிறைய பேர் இருந்தோம். 10ஆம் தேதிக் காலை மாவட்ட கலேக்ட்ர் செல்வராஜ், எஸ்பி விஜேந்திர பிதாரி, ஏடிஜிபி ராஜேஷ் தாஸ் உள்ளிட்ட நிறைய அதிகாரிகளும் விரைவுத் தாக்குதல் நடத்தக்கூடிய நீலநிற உடுப்புகளை அணிந்த காவல்படையினரும் (Rapid Action Force) எங்களை நோக்கி வந்தனர். நாங்கள் 10 நிமிடங்களில் கலைந்து செல்லாவிட்டால் காவல்துறையினர் எங்களுக்கு எதிராக செயலாற்ற வேண்டியிருக்கும் என்று எஸ்பி திடீரென்று அறிவித்தார். எங்களுடைய தலைவர்களும் பெண்களும் அவருடன் பேச முயற்சி செய்து கொண்டிருக்கையிலேயே காவல்துறையினர் எதிர்முனையிலிருந்து எங்களைத் தாக்கத் தொடங்கினர். அவர்களுடைய தாக்குதல் தொடர்ந்து நடைபெற்றதால் குழப்பமும் கலக்கமும் ஏற்பட்டன. எங்களை பாதுகாத்துக் கொள்ள கைவசம் எதுவும் வேறு இல்லை. ஒரு பக்கம் கடல், மறுபக்கம் காவல்துறையினரின் தடிகள், கண்ணீர்ப்புகை ஷெல்கள். எங்கள் மத்தியில் நிறைய முதியவர்கள், பெண்கள், குழந்தைகள். துப்பாக்கிக் குண்டுகளை போல காவல்துறையினர் கண்ணீர்ப்புகை ஷெல்களை பயன்படுத்தினர். எங்களை துரத்தி அடித்தனர். என்மீது எறியப்பட்ட கண்ணீர்ப்புகைக் ஷெல் கழுத்தில் பட்டு காயப்படுத்தியது. அன்று முழுவதும் நான் மருத்துவமனைக்குச் செல்லவில்லை. காவல்துறையினர் ஏதாவது செய்த விடுவார்களோ என்று பயம். வலியைக் குறைக்க எந்த மருந்துமாத்திரையும் இல்லை. பிறுகு நான் நாகர்கோயில் திரவியம் மருத்துவமனைக்கு சென்றேன். கழுத்தில் 20 தையல்கள் போட்டார்கள். ரூ 60, 000 செலவாயிற்று. கழுத்தில் வீக்கம் குறையவில்லை. தாங்கமுடியாத வலி வேறு."

**டேவிட்**, 49. மீனவர். பீடிச்சுற்றும் தொழிலாளி. அவர் கூறியதாவது -

"இந்த அணு உலையால் எங்களுடைய கிராமத்துக்கோ பொதுவாக சமதாயத்துக்கோ எந்தவித நன்மையும் எற்படாது என்று நான் உறுதியாக நம்புகிறேன். இத்தகைய ஆபத்தான வழிமுறைகளை பயன்படுத்தி மின்சாரம் தயாரிப்பது சரியானதாக இருக்க முடியாது. எங்களுடைய கவலைகளை முன்நிறுத்தி பதில்கள் பெறவே இந்த போராட்டத்தில் கலந்து கொண்டேன். காவல்துறையினரின் தடியடிக்கும் கண்ணீர்ப்புகை வீச்சுக்கும் ஆளானேன். கால்களிலும் முகத்திலும் காயங்கள். இங்குள்ள செவிலியர் ஒருவர் அவராகவே தையல் போட்டுவிட்டார்."

தனக்கு 100 வயதிருக்கும் என்று குறிப்பிடும் **ஞானப்பிரகாசம்** அவருடைய பின் தலையில் ஏற்பட்டுள்ள காயங்களை காண்பித்தார். தையல் போடப்பட்டிருந்தது. வன்முறையில் இறங்கக்கூடிய நிலையில் தான் இல்லாதபோதும் காவல்துறையினர் தன்னை தாக்கினர் என்றார். வன்முறையில் தனக்கு நம்பிக்கை இல்லை என்று கூறும் அவர் மேலும் சொன்னதாவது -

"நாங்கள் முக்கியமான, ஆழமான கேள்விகளை எழுப்பியுள்ளோம். எங்களுக்கு வேண்டியது பதில்களே தவிர வன்முறையல்ல. இந்த விவாதத்தில் வன்முறைக்கே இடமில்லை. இருந்தாலும் எங்களுக்கு இது மட்டுமே கொடுக்கப்பட்டுள்ளது."

30 வயதான **சகாயராஜ் பிதா**வை காவல்துறையினர் அடித்து நொறுக்கியிருந்ததால் அவரால் எழுந்து நிற்கக் கூட முடியவில்லை. அவர் பஞ்சாயத்தில் வேலைப் பார்ப்பவர். 10 ஆம் தேதியன்று காவல்துறையினர் குறிவைத்து அடித்தவர்களில் அவரும் ஒருவர்.

"என்னால் சரியாக மூச்சுவிட முடியவில்லை. கொஞ்சம் அசைந்தால் கூட எலும்புகள் ஆடுவது போல இருக்கிறது. எனது உடலின் மேல்பகுதியில் வலியான வலி. என்னைக் கவனித்துக் கொள்ள யாருமில்லை. சரியான மருத்துவ உதவியும் எனக்குக் கிடைக்கவில்லை. ஊரிலுள்ள டிஸ்பென்சரியில் உள்ளவர்கள் 2 முறை ஊசிப் போட்டார்கள். பெரிய ஆஸ்பத்திரிக்குப் போகச் சொல்கிறார்கள். எப்படி போவது என்று தெரியவில்லை. போகும் போது கைது செய்து சிறையில் அடைத்து விட்டால்? ஆபத்தான அணுஉலை வேண்டாம் என்று சொன்னதன் விளைவுதான் இந்த வலியும் வேதனையும். நான் அங்கிருந்து விரைவாக சென்றிருக்காவிட்டால் அவர்கள் மண்டையை பிளந்திருப்பார்கள்."

29 வயதான உடல்ஊனமுற்ற **லவினியா** அளித்த வாக்குமூலம் மிகுந்த கவலையளிப்பதாக இருந்தது. சிறு வயதில் போலியோ நோயால் பாதிக்கப்பட்டவர். அந்த சின்ன வயதில் உரிய சிகிச்சை அளிக்கப்படவில்லை. லாவினியாவின் வாக்குமூலத்திலிருந்து போராட்டத்தில் கலந்து கொண்ட பெண்கள் சந்திக்கும் விசேஷப் பிரச்சனைகள், அவர்களை நிர்பந்திக்கும் விஷயங்கள் அகியவற்றை குறித்து அறிய முடிந்தது. அவர் கூறியதாவது -

"நான் இருக்கும் நிலையில் இந்த மாதிரி போராட்டங்களில் நான் கலந்து ஏன் கலந்து அவதிப்பட வேண்டும் என்று பலர் என்னைக் கேட்டுள்ளனர். நான் அனுபவித்து வரும் ஊனமுற்ற நிலையை வேறு எந்த குழந்தையும் அனுபவிக்கக்கூடாது. அணு உலை விபத்துகளாலும் தொடர்ந்து கதிர்வீச்சுக்கு ஆளாவதால் ஏற்படும் பாதிப்புகளாலும் தாயின் கருவில் இருக்கம் போதே ஊனமுற வாய்ப்புள்ளது. வருங்காலங்களில் இப்படி நிறைய பிள்ளைகள் பிறந்து அவதியுறக் கூடாது. நான்கு வயதாகும் வரை எனது மூத்தப் பெண்ணுக்குப் பேச்சு வரவில்லை. அப்போது நான் அனுபவித்த வேதனையை சொற்களால் விவரிக்க முடியாது. அத்தகைய வேதனையை எந்த தாயும் அனுபவிக்கக் கூடாது. எந்த குழந்தையும் ஊனத்துடன் பிறக்கக் கூடாது. இதனால்தான் நான் அணு உலைக்கு எதிரான எல்லா போராட்டங்களிலும் கலந்து கொள்கிறேன்.

9ஆம் தேதியன்று கடற்கரையில் நடந்த போராட்டத்தில் நானும் பங்கேற்றேன். 10ஆம் தேதியன்று நடந்த நிகழ்வுகள் கெட்ட கனவாகவே உள்ளன. காவல்துறையினர் கண்ணீர்ப்புகை ஷெல்களையும் தடியடியையும் ஒரேசமயத்தில் தொடங்கினர். அப்போது நான் எனது குழந்தைகளுடன் ஓடத் தொடங்கினேன். ஆனால் எனது கால் உள்ள நிலையில் என்னால் வேகமாக ஒட முடியாது. எனது பெண் பிள்ளை காயமுற்றாள். அவள் கடலுக்கு அருகில் இருந்ததால் நான் அவளை நோக்கிச் சென்றேன். அவளருகே சென்று அவளை தூக்க முயற்சித்த போது விரைவு காவல்படையைச் சேர்ந்த ஒருவன் என்னை தடுத்து நிறுத்தி கூறினான்

- "ஏன் எல்லா பொம்பளைங்களும் உதய குமார் பின்னால ஓடுறீங்க? வா, என்னோட படுக்க வா." என்று திரும்ப திரும்ப மிகவும் ஆபாசமான வகையில் சொன்னான். என் கையை விடுவிக்க நான் முயன்றும் முடியவில்லை. எனது மார்பகங்களை பற்றி என்னை துன்புறுத்தினான். நான் அவனுடன் படுக்க வேண்டும் என்று சொல்லிக் கொண்டே இருந்தான். என் பிள்ளைக்கு ரத்தக் காயம். அவள் கடலில் மூழ்கிவிடுவாளோ என்ற பயம் வேறு. அவனுடைய கால்களில் விழாத குறையாக அவனுடன் மன்றாடி என்னை விடுவித்துக் கொள்ள முனைந்தேன். காக்கிச் சீருடையணிந்த மற்றொரு போலிஸ்காரன் என்னை விட்டுவிடும்படிச் சொன்னதும்தான் என்னை விடுவித்தான். அந்த விரைவுக் காவல்படையாளியின் பெயர் தெரியாவிட்டாலும் ஆளை என்னால் அடையாளம் காட்ட முடியும்."

போராட்டத்தில் தொடர்ந்து கலந்து கொண்டு வந்துள்ள **மில்ட்ரட்** என்பரும் இவர் கூறியதை ஆமோதிக்கும் வகையில் வாக்குமூலமளித்துள்ளார்.

"நானும் 10ஆம் தேதியன்று பிறருடன் சேர்ந்து கடற்கரையில் நடந்தேன். நாங்கள் அங்கிருந்து போய்விட வேண்டும் என்ற எஸ்பி கூறியபோது அவருடன் பேசினன். நாங்கள்பேசிக் கொண்டிருக்கும் போது விரைவுக் காவல்படையினர் சிலர் கூட்டமாக மக்கள் திரளினரிடையே நுழைய பார்த்தனர். ஒழுங்கப் பேண வேண்டும் என்பதற்காக மக்கள் கைக்கோர்த்த வண்ணம் சங்கிலிப் போல் இருந்ததால் அவர்கள் இவ்வாறு செய்ததும் குழப்பம் ஏற்பட்டது. அச்சமய்ம போலீசாப் கண்ணீர்ப்புகை ஷெல்களை கூட்டத்தினிடையே எறிந்தனர். தடியடி நடத்தத் தொடங்கினர். காவல்துறையினர் எங்கள துரத்தி வந்ததும் நானும் சகாய இனிதாவும் மற்றொருவரும் கடலுக்குள் விழுந்தோம். அவர்களும் கடலுக்குள் நுழைந்து எங்களை பின்தொடர முனைந்தனர். நாங்கள் கடலிலிருந்து மீண்ட வர முயற்சி செய்து கொண்டிருக்கையில் விரைவுகாவல் படையைச் சேர்ந்த இளைஞன் ஒருவன் தனது ஆண்குறியை தூக்கிக் காட்டியபடி எங்களை நோக்கி வந்தான். எனது மகனை போல இருந்த அவன் இப்படிச் செய்ததும் அதிர்ச்சியுற்றேன். "என் பிள்ளைய போல இருக்க. ஒன்ன மாதிரி மகன் எனக்கு. உனக்காக நான் பரிதாபப்படுறேன்" என்று அவனிடம் சொல்ல வேண்டும் போல் இருந்தது. நாங்கள் அமைதியாக போராடி வருகிறோம். அதற்காக இப்படியா எங்களுக்கு பதிலடி கொடுக்க வேண்டு? இத்தனை பெண்கள் முன்னணியில் இருந்து கொண்ட போராடுவது உன் கண்களை உறுத்தினால் அதற்கு நான் என்ன செய்ய முடியும்? இந்த அணு உலையால் எல்லா வகைகளிலும் எனக்கு பாதிப்பு - இந்த கடல், இங்குள்ள இயற்கை, வள அதாரங்கள், எனது வாழ்வாதார உரிமை, இவற்றுக்காக நான் போராடுகிறேன்."

தடியால் அடிவாங்கியதால் மூக்கில் காயமுற்ற 43 வயது **ரீட்டம்மா** கூறியதாவது -

"10அம் தேதியன்று எங்களுடைய பங்குத் தந்தை ஜெயகுமார் நாங்கள் கலைந்து போக வேண்டும் என்றும், தான் காவல்துறையினருடன் பேசிவிட்டு வருவதாகவும் கூறினார். அவருடன் நாங்கள் பேசிக் கொண்டிருக்கும் போது 10 நிமிடங்களில் நாங்கள் கலைந்து செல்ல வேண்டும் என்ற எஸ்பி அறிவித்தார். என்ன செய்வது என்று நாங்கள் கலந்தாலோசித்துக் கொண்டிருக்கும் போதே எங்களுக்கு வலது பக்கத்தில் ஏதோ சத்தம் கேட்க திரும்பிப் பார்த்தோம். காவல்துறையினர் வாலன்டியர்ஸ் உடையில் இருந்த இளைஞர்கள் சிலரை தாக்கிக் கொண்டு இருந்தனர். அந்தக் கூட்டத்தில் எனது மகனும் இருந்ததால் நான் அவனை பாதுகாக்க சென்றேன். அப்போது யாரோ எனது முகத்தில் ஓங்கி அடிக்க எனது மூக்கு உடைந்தது. காவல்துறையினர் எங்களை துரத்தி வந்தனர். கடலுக்குள் குதித்தவர்களைக் கூட அவர்கள் விட்டு வைக்கவில்லை. எங்களுடைய மண்ணில், எங்களுடைய கிராமத்தில் அமைதியாக போராட நாங்கள் அனுமதிக்கப்படவில்லை என்றால் நாளை அவர்கள் இந்த அணு உலையை இயக்கத் தொடங்கியவுடன் என்ன நடக்கும்? இன்றைக்கு எங்களுடைய பயங்கள், அச்சங்கள் அகியவற்றை பற்றி கவலைப்படாதவர்கள் நாளை எங்களுக்கு ஏதாவது நடந்தால் எங்களிடம் அக்கறையோடு நடந்து கொள்வார்கள் என்று என்ன நிச்சயம்?"

56 வயதான **சுகுமார்** என்ற மீனவருக்கு வயிற்றிலும் கால்களிலும் கண்ணீர்ப்புகை ஷெல்களால் காயங்கள் ஏற்பட்டுள்ளன.

"நான் மீனவன் எனது மகனும் மீனவன்தான். எங்களுடைய வாழ்வாதார உரிமையை, வருங்காலத்தை பாதுகாக்க நாங்கள் விரும்புகிறோம். நாங்கள் சத்தியாகிரக மறையில் போராடி வருகிறோம். யார் என்ன வேண்டுமானாலும் பேசலாம். உண்மை என்னவென்றால் சண்டையிடும் ஆற்றலும் தெம்பும் எங்களுக்கு உள்ள போதிலும் அன்று நாங்கள் கடற்கரையில் நிராயுதபாணிகளாக தான் திரண்டோம். எங்களை தாக்கியவர்களுடன் சண்டையிட எங்கள் வசம் இருந்தே ஒரே ஆயுதம் கடற்கரை மணல்தான்.

கண்ணீர்ப்புகை ஷெல்களை குண்டுகள் போல் பாவித்து அவர்கள் எங்களுக்கு மிக அருகே வந்து அவற்றை தூக்கி எறிந்தனர். எனது கால்களிலும் வயிற்றிலும் அவற்றின் துகள்கள் பட்டு பொறிபொறியாகி உள்ளது. இப்போதும் கூட வலி தாங்க முடியவில்லை."

## சுனாமி காலனி

2004 சுனாமியினால் பாதிக்கப்பட்டவர்களை மறுகுடியமர்த்துவதற்காக கட்டப்பட்ட மொத்தம் 450 வீடுகள் சுனாமி காலனியில் உள்ளன. அணு உலையின் சுற்றுச் சுவரிலிருந்து வெறும் அரை கிலோமீட்டர் தொலைவிலேயே இருக்கும் இக்காலனியின் கடைக் கோடி வீட்டிலிருந்து கூட அணு உலையின் சுற்றுச்சுவர் தெரிகிறது.

நாங்கள் செப்டம்பர் 20ஆம் தேதி அங்கு சென்றபோது அந்த கிராம்ம் ஒரு பாழடைந்த கிராமம் போல் இருந்த்து. வீடுகளில் இருப்பதற்கு பயந்து இரவு நேரங்களை இடிந்தக்கரையின் திறந்த வெளி பந்தலில் கழிப்பதையே மக்கள் விரும்பியதால் வீடுகள் பூட்டப்பட்ட நிலையிலேயே இருந்தன.

58 வயதாகும் **தமிழரசி** சுனாமி காலனியில் கடை ஒன்றை நடத்தி வருகிறார். தான் 10ஆம் தேதி இரவு போராட்டத்தை முடித்துவிட்டு இரவு வீட்டுக்கு திரும்பி வந்தபோது, அவரது கடை சூறையாடப்பட்டிருந்ததாகவும், கடையில் இருந்த பொருட்களும், கல்லாவில் இருந்த 700 ரூபாய் பணமும் காணாமல் போயிருந்ததாகவும் கூறுகிறார். காவல்துறையினர் தான் இந்த வேலையை செய்திருக்க வேண்டும் என்று கூறும் இவர் இது தொடர்பாக புகார் அளிப்பதை அச்சம் காரணமாக தவிர்ப்பதாக கூறுகிறார்.

32 வயதாகும் **யோகேஷ்** அவர் வீட்டின் உடைக்கப்பட்ட கண்ணாடிகளையும் மற்ற பாதிப்புகளையும் காட்டினார். 13 ஆம் தேதி அவர் வீட்டுக்கு திரும்பி வந்த போது வீடு இப்படி இருந்ததாகவும், வீட்டினுள் காலி சாராய குப்பிகள் இருந்ததாகவும் கூறுகிறார். காவல்துறையினர் தன் வீட்டில் தங்கியிருந்திருக்கக் கூடும் என்ற அவருடைய சந்தேகத்தை அவரது அண்டை வீட்டினரும் உறுதி செய்தனர். 4800 ரூபாய் மதிப்புள்ள 4 தங்க மோதிரங்களை காவல்துறையினர் எடுத்துச் சென்றுள்ளதாக இவர் கூறுகிறார்.

48ஆம் எண் வீடு மோசமாக சேதப்படுத்தப்பட்டுள்ளது. தொலைக்காட்சிப் பெட்டி உடைக்கப்பட்டும், கதவு உடைக்கப்பட்டும், பீரோவிலிருந்த துணிகள் வெளியே எடுக்கப்பட்டும் இருந்தன. துன்பத்திலிருந்த 30 வயதான **யுதியா**, காவல்துறையினர் தன்னுடைய வீட்டை 10ஆம் தேதி சூறையாடி, 40 கிராம் தங்கத்தையும், பீரோவிலிருந்த 20,000 ரூபாய் பணத்தையும் எடுத்துக்கொண்டதாக கூறுகிறார், யுதியாவின் கணவர் வெளிநாட்டில் வேலை பார்ப்பதால், புகார் அளிக்கவும் பயப்படுகிறார். “யாரிடம் போய் புகார் அளிப்பது? காவல்துறையிடமா?

காவல்துறையினரே என் வீட்டை உடைத்து, சேதப்படுத்தி சூறையாடியிருக்கும் போது அவர்களிடமே போய் புகார் அளிக்க முடியுமா?” என்று கேட்கிறார்

11ஆம் தேதி காலையில் 16 வயதான **கிஷன்** காலனியில் உள்ள தனது வீட்டிலிருந்து காவல்துறையினர் தூக்கிச் சென்று, பட்டப்பகலில் மக்கள் முன்னாலேயே அடிக்கப்பட்டுள்ளார் என்று சுனாமி காலனியில் வசிக்கும் ஒருவர் கூறினார். அவரை இப்போது பாளையங்கோட்டை சிறார் காப்பகத்தில் வைக்கப்பட்டுள்ளார்.

**வைராவிகிணறு**

500- 600 வீடுகளை கொண்டா நாடார் கிராமம் இது. இக்கிராமத்தின் ஆண்கள் அரபு நாடுகளில் பணிபுரிவதால் இந்தக் கிராம்ம் வசதியாக இருக்கிறது. பெண்கள் பீடி சுற்றுகிறார்கள்.

26 வயதான **அம்பிகா**, இயக்கத்தின் உறுதியான ஆதரவாளர். செப்டம்பர் 10ஆம் தேதி இந்தக் கிராமத்தைச் இரண்டு சிறுவர்கள் ஆடைகள் அவிழ்க்கப்பட்டு காவல்துறையினரால் அடிக்கப்பட்டுள்ளனர். இதை பெண்கள் பார்த்து அவர்களை சூழ்ந்து கொண்ட்தால் காவல்துறையினர் அந்த சிறுவர்களை விடுவித்துள்ளனர்.

ஆனால் அதன் பிறகு அவர்கள் கிராமத்திற்குள் திரும்பி வந்து மக்களை சுடுவதாக மிரட்டியபோது, சில சிறுவர்கள் காவல்துறையினர் மீது கல்லை எறிந்துள்ளனர். இதனைத் தொடர்ந்து காவல் துறையினர் பின்வாங்கி மீண்டும் இன்னும் பெரும் படையோடு கிராமத்திற்குள் திரும்பி வந்து கதவுகளை உடைத்தும், ஜன்னல்களை உடைத்தும் பெண்களுக்கு எதிராக மோசமான வார்த்தைகளையும் பயன்படுத்தியுள்ளனர்.

வயதான **ராசம்மாவிற்கு** நடப்பதே பெரும் முயற்சியாக இருந்தது. கண்களில் கண்ணீருடன் பேசிய அவர் தன்னுடைய 63 வயதான கணவர் பால் ராஜூம் தானும் உணவு உண்ண உட்கார்ந்த போது காவல்துறையினர் பால் ராஜை கூட்டிச் சென்றதாக கூறுகிறார். “மக்கள் ஓடும் சத்தம் எங்களுக்கு கேட்ட்து. நாங்கள் கதவை அடைத்துக் கொண்டு உள்ளே உட்கார்ந்திருந்த போதும், வேட்டைகாரர்கள் போல் வீட்டினுள் நுழைந்த காவல்துறையினர் கதவை தள்ளி உடைத்து திறந்து கொண்டு வந்து என்னுடைய கணவரை வெளியே இழுத்துச் சென்றனர். அவர் வயது முதிர்ந்தவர். நாங்கள் எந்த தவறையும் செய்யவில்லை என்று கெஞ்சினேன். அவருக்கு கண் அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது என்றும் அவருக்கு ஒரு கண்

பார்வை சரியில்லை என்றும் கூறினேன். அவரது காலில் ஒரு எலும்பு மாற்று அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. அவர் எப்படியிருக்கிறார் என்று எனக்குத் தெரியவில்லை. அவரை கொண்டு போய் வேலூர் சிறையில் இவ்வளவு தூரத்தில் வைத்துள்ளனர். நான் போய் அவரை பார்ப்பது கூட முடியாது. இந்த கடிதம் எனக்கு இப்பொழுது தான் கிடைத்தது" என்று காவல்துறையிடமிருந்து பால் ராஜின் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் (U/S 147, 148, 353, 451, 121 (A), 124 (A), 374, 307 IPC r/w 3 of TNPPD act.) கிடைக்கப்பெற்ற கடித்த்தை காட்டினார்.

காவல் துறையினரால் கைது செய்யப்பட்டுள்ள 16 வயது **ராஜகுமாரின் தாய் முத்துலட்சுமி**.
"காவல்துறையினர் ஊருக்குள் வருவதை கேள்விபட்ட போது நாங்கள் அனைவரும் வீட்டுக்குள் இருந்தோம். நாங்கள் உடனடியாக கதவு, ஜன்னல்களை அடைத்துக் கொண்டோம். என்னுடைய மகன் ராஜகுமார் எங்கள் வீட்டு மாடியில் புறாக்களுக்கு உணவு அளித்துக் கொண்டிருந்தார். காவல்துறையினர் வீதிகளில் ஓடும் சத்த்தைக் கேட்டு அவர் மாடியிலிருந்து எட்டி பார்த்திருக்கிறார். அதைத் தொடர்ந்து எங்கள் வீட்டுக்குள் புகுந்த காவல்துறையினர் அவரை கண்மூடித்தனமாக அடித்து இழுத்துச் சென்றனர். அவர் படிக்கும் ஐஐடி-க்கு சென்று அவருடைய சான்றிதழ்களை எடுத்து அவருடைய வயதை உறுதி செய்துள்ளனர். இப்போது அவர் பாளையங்கோட்டை சிறார் காப்பகத்தில் வைத்துள்ளனர். நான் என் மகனை நேற்று சென்ற பார்த்த போது அவர் என்னிடம் பேச மறுத்துவிட்டார். அவருடைய வாழ்க்கையையே நாசமாக்கிவிட்டனர்." என்று கூறினார்.

நாற்பது வயதான **பெல்ஜின் ராஜன்** ஒரு விவசாய கூலி. தன்னுடைய குடும்பத்தில் சம்பாதிக்கும் ஒரேயொரு நபரும் இவர் தான். ஒரு கைக்குழந்தையோட சேர்த்து 4 குழந்தைகளோடு இருக்கும் அவரது மனைவி எங்களிடம் பேசிய போது, "அவர் வயலிலிருந்து திரும்பி வந்த போது நாங்கள் அனைவரும் உணவு உண்ண அமர்ந்தோம். நான் தட்டில் சோற்றை வைத்த போது காவல்துறையினர் உள்ளே நுழைந்தனர். கிட்ட்த்தட்ட 40 காவல்துறையினர் என் கணவரை என் கண் முன்னாலேயே அடித்து இழுத்துச் சென்றனர். அவரை எங்கு வைத்திருக்கிறார்கள் என்று கூட எனக்குத் தெரியாது. எனக்கு கிடைத்ததெல்லாம் என் கணவர் மீதான குற்றச்சாட்டுகளை கொண்ட இந்தக் கடிதம் மட்டும்தான். என் கணவர் தேச துரோகி என்று கூறுகின்றனர். எனக்கு ஒன்றுமே புரியவில்லை. நாங்கள் கடுமையாக உழைப்பவர்கள். நாங்கள் யாருக்கும் எந்தத் தீங்கும் செய்யவில்லை. என் குழந்தைகள் எந்தக் காரணமும் இல்லாமல் பட்டினியாக இருக்கின்றனர்." என்று கூறினார்.

**<u>கூடங்குளம்:</u>**
கூடங்குளம், அணு மின் நிலையத்திற்கு மிக அருகில் இருக்கும் கிராமம். 3000 வீடுகளையும், 20,000 மக்களையும் கொண்ட பெரிய கிராமம் இது. இந்த

அறிக்கையின் உடன் இணைக்கப்பட்டுள்ள பட்டியலின் படி காவலில் வைக்கப்பட்டுள்ளவர்களில் பெரும்பான்மையினர் இக்கிராமத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கிறார்கள்.

இந்தக் கிராமத்திற்குள் சென்று மக்களிடம் பேசிய போது, சுனாமி காலனி மற்றும் வைராவி கிணறு மக்கள் மத்தியில் காணப்பட்ட அதே பயம் தெரிந்தது. தொடக்கத்தில் வெளியில் வந்து பேசுவதற்கு மக்கள் தயங்கினர். ஒருவர் எங்களோடு வந்து காவல்துறையினரால் சேதப்படுத்தப்பட்ட வண்டிகளை காட்டுவதற்காக கூட்டிச் செல்வதற்கு ஒப்புக்கொன்டார். ஆனால் காவல்துறையினர் அவரை கைது செய்துவிடுவார்கள் என்று பயந்து அவரும் விரைவில் சென்றுவிட்டார். இக்கிராமத்தின் பெரும்பான்மையான இளைஞர்கள் காவல்துறையினரின் அடக்குமுறையால் கிராமத்தை விட்டு வெளியேறி, சிலர் சென்னை வரைக் கூட, சென்றுள்ளதாக கூறுகிறார்கள்.

கடை வைத்திருக்கும் **சுப்பையா**, 9ஆம் தேதி அன்று போராட்டத்திற்காக மக்கள் தேவாலயத்திற்கு முன் கூடியிருந்ததாக கூறுகிறார். “10ஆம் தேதியின்றி சிலர் இடிந்தக்கரையில் நடக்கும் போராட்ட்த்திற்கு சென்றனர். மீதமிருந்தோர் இங்கேயே இருந்தோம். இடிந்தக் கரையில் காவல்துறையினரின் அடக்குமுறையை கேள்விபட்டபோது நாங்கள் நான்கு முக்கிற்கு சென்று முழக்கங்கள் எழுப்பினோம். சில மணி நேரத்திற்கு என்ன செய்வது என்றே தெரியவில்லை. பிறகு, திடீரென்று காவல்துறையினர் எங்கள் கிராமத்திற்குள் நுழைந்ததை நாங்கள் கண்டோம். கண்மூடித்தனமாக அவர்கள் அனைவரையும் தாக்கத் தொடங்கினார். அவர்களே பஞ்சாயத்து அலுவலகத்தையும் எரித்தனர். கிட்டத்தட்ட 4 மணி நேரத்திற்கும் மேலாக சூறையாட்டத்தில் ஈடுபட்ட இவர்கள் மக்களின் சொத்துகளையும், வாழ்வாதாரத்திற்கான வசதிகளையும் சேதப்படுத்தினர்.
கூடங்குளத்தில் வசிக்கும் பெரும்பான்மையான மக்கள் வியாபாரிகள். அவர்களின் வாழ்வாதாரமே அவர்கள் வைத்திருக்கும் ஆட்டோக்கள், வேன்கள் மற்றும் பிற வண்டிகளையே சார்ந்திருக்கிறது. இவற்றை நாசம் செய்ததன் மூலம் எங்கள் நிதி ஆதாரங்களை பாதித்துள்ளனர்.”

43 வயதான செல்வராஜ் இந்தக் கிராமத்திற்கு வந்திருந்தவர் என்றும் அவரை பிடித்துச் சென்று அவர் மீது தேசத் துரோக குற்றச்சாட்ட சுமத்தியிருக்கின்றனர் என்றும் சுப்பையா கூறினார். இடிந்தக்கரையின் போராட்டக்காரர்களுக்கு குடி நீர் கொடுக்கும் வேலையை செய்து கொண்டிருந்த மன நிலை பாதிக்கப்பட்ட இளைஞர் ஒருவரையும் அவர்கள் கைது செய்துள்ளனர். 81 வயதான ஒருவரை அடித்து அவரது மண்டையை உடைத்துள்ளனர். அவருடைய 15 வயது பேத்தி சுபாஷினி அவரைக் காப்பாற்ற முயன்ற போது அவரையும் அறைந்துள்ளனர்.

இடிந்தக்கரை, வைராவி கிணற்றில் உள்ள பெண்கள் கூறியது, “ஏன் நீங்கள் அனைவரும் உதயகுமாரின் பின்னால் போகிறீர்கள்? அவனிடம் இருக்கிறது எது

எங்களிடம் இல்லை? வாங்க, காட்டுறேன்" என்றும் இன்னும் மோசமாகவும் பேசியதாக கூறியுள்ளனர்.
கூடங்குளத்தில் இருந்து கைது செய்யப்பட்டுள்ளவர்களுள் 15 வயதான கருணா சாகரும் அடக்கம். அவர் இப்போது பாளையங்கோட்டை சிறார் காப்பகத்தில் வைக்கப்பட்டுள்ளார்.

நாங்கள் (குழுவினர்) 7 மணிக்கு மேல் கிராமத்திற்குள் வந்தால் இந்தக் கிராமமே காலியாக இருப்பதைப் போன்ற உணர்வு ஏற்படும் என்று மக்கள் கூறுகின்றனர். தங்கள் வீடுகளிலேயே, குறிப்பாக இரவு வேளைகளில்,
பயத்தில் தான் வாழ்ந்து வருகின்றனர், "வண்டிச் சத்தம் கேட்டால் கூட காவல் துறையினர் தான் வருகின்றனர் என்று பயந்து போகிறோம்." என்று கூறினர். உண்மை அறியும் குழுவிற்கு உடைக்கப்பட்ட ட்ரக் ஒன்றையும் ஆட்டோ ஒன்றையும் காட்டினர். காவல் துறையினர் இன்னும் பல வண்டிகளையும் எடுத்துச் சென்றுள்ளதாக மக்கள் கூறினர். புகார் அளித்தீர்களா என்று கேட்ட போது, "புகார் அளிக்க வேண்டும் என்றாலும், யாரிடம் புகார் அளிப்பது? அரசு தானே தன்னுடைய காவல்துறையை கொண்டு இந்த வேலைகளை செய்து வருகிறது? நாங்கள் புகார் அளித்தால், எங்களை கொலை செய்து விடுவார்கள்.
நீதிமன்றமும் அரசுக்கு தானே ஆதரவளிக்கிறது." என்று கூறுகின்றனர். காவல் துறையினர் கிராமத்திற்குள் நுழைவதை தடுத்திருப்பதால் தங்களின் உறவினர்கள் கூட வர முடியவில்லை என்று பலர் கூறியுள்ளனர்.

<u>பாளையங்கோட்டை சிறார் காப்பகம்:</u>
குழந்தைகள் நல கமிட்டியின் உறுப்பினர் ஒருவரும் சிறுவர்களின் வழக்குரைஞர் ரமேஷ் கணபதியும் உடன் இருந்த போதும், பாளையங்கோட்டை சிறார் காப்பகத்தில் உள்ள நான்கு சிறுவர்களை பார்ப்பதற்கான அனுமதி மறுக்கப்பட்டது. சிறுவர் சீர்திருத்த வாரியத்தின் கவுன்சிலராக நியமிக்கப்பட்டுள்ள நவஜீவன் அறக்கட்டளையைச் சேர்ந்த **கணேசனை** சந்தித்த போது "அவர்கள் காவல்துறையினரால் மிக மோசமான முறையில் அடிக்கப்பட்டதாகவும், செருப்பை கழட்டி விட்டு தார் ரோட்டில் அவர்களை நடக்கச் சொன்னதாகவும், மீண்டும் மீண்டும் அவர்கள், "ஒண்டிக்கு ஒண்டி வர சொன்னீங்கள்ள, இப்ப வந்திருக்கோம். ஒண்டிக்கு ஒண்டி வா" என்று கூறி சிறுவர்களின் உடைகளை களைந்து அவர்களை கேவலமாக பேசியதாகவும் சிறுவர்கள் என்னிடம் கூறினர்." சிறுவர்களில் ஒருவர் மிக மோசமாக அடிக்கப்பட்டதாகவும், இன்னொருவர் மன ரீதியாக மிகுந்த தாக்கத்துக்குள்ளாகியிருப்பதால் பேச மறுப்பதாகவும் கூறினார். சிறுவர்களை சந்திக்க அனுமதி மறுக்கப்பட்டதால் இந்த கூற்றுகளை உறுதி செய்யக்கூடிய கூடிய வாய்ப்பு எங்களுக்கு கிட்டவில்லை.